பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 29 திங்கட்கிழமை 13.06.2022 கதிர் 111

## மீன்களின் விலை மீண்டும் உயர்வு



நாட்டின் பொதுச் சந்தைகளில் மீன்களின் விலை மீண்டும் சடுதியாக அதிகரித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரண ☞2

# இலங்கை மீண்டெழ 18 மாதங்கள் தேவை

### நெருக்கடிக்குத் தீர்வு கான அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்றிணைய வேண்டும் என்று பிரதமர் ரனில் வலியுறுத்து

தற்போதைய நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு, நாட்டின் பொருளாதாரம் உறுதித்தன்மைக்கு வருவதற்கு சுமார் 18 மாதங்கள் ஆகும். ☞2





மன்னார் வைத்தியசாலையில்

## நோயாளி மீது கத்திக்குத்து!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் இன்று அதிகாலை ஒரு மணியளவில் கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலை நோயாளர் விடுதியில் தங்கி ☞2

## தந்தையைக் கட்டையால் அடித்துக் கொன்ற மகன்

மகன் ஒருவர் தனது தந்தையைக் கட்டையால் அடித்துப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் குருவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொஹறபாவ பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. ☞2

தூக்கில் தொங்கியவாறு

## 8 வயது சிறுமி சடலமாக மீட்பு



நுவரெலியா மாவட்டம், கந்தப்பளை-ஹைபொரஸ்ட் இலக்கம் - 01 தோட்டத்தின் தனிவீட்டுக் குடியிருப்பில் தூக்கில் தொங்கியவாறு 8 வயது சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. ☞2

## ஆணின் சடலம் புத்தளத்தில் மீட்பு



புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் மதுரங்குளி நகரில் வீதியோர வாடிகானுக்குள் இருந்து ஆண் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

## இன்று கூடும் அமைச்சரவையில் '21' தொடர்பில் இறுதித் தீர்மானம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று மாலை அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் இன்று கலந்துரையாடப்படவுள்ளது என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ☞2

## கொச்சிக்கடை அந்தோனியார் திருவிழா இன்று



கொழும்பு - கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் 188ஆவது வருடாந்தத் திருவிழா இன்று கொண்டாடப்படுகின்றது. ☞2

## அனுமதியின்றி விறகு ஏற்றி வந்த 8 வாகனங்களுடன் சாரதிகள் கைது



அனுமதியின்றி விறகு ஏற்றி வந்த 8 வாகனங்களும் அதன் சாரதிகளும் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுஆனையிறவு மற்றும்சங்குப்பிட்டிப் பகுதிகளில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி -ஆனையிறவு வீதித்தடையில் வைத்து அனுமதியின்றி ஏற்றிவரப்பட்ட விறகுகளுடன் 6 வாகனங்களும், பூநகரி - சங்குப்பிட்டி பால வீதித் தடையில் வைத்து 2 வாகனங்களுமாக 8 வாகனங்களும் அதன் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒதுக்கப்பட்ட காடுகளில் இருந்து பச்சை மரங்களை வெட்டி அனுமதிப் ☞2

## யாழில் போதை ஊசி ஏற்றிய குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் போதை ஊசி ஏற்றினார் எனக் கருதப்படும் குடும்பஸ்தர் ஒருவர் வாழைத்தோட்டத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


யாழ்., உரும்பிராய்ப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது 36 வயதுடைய இணுவில் வடக்கைச் சேர்ந்த துரைராசா உசாந்தன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் சிவன் வீதியில் உள்ள வாழைத்தோட்டம் ஒன்றில் 4 இளைஞர்கள் சேர்ந்து போதை ஊசி ஏற்றியுள்ளனர். இதன்போது அதிக போதை காரணமாக ஒருவர் சுயநினைவிழந்திருந்த சமயம் சுய நினைவை இழந்து நிலையில் ஒருவர் வீழ்ந்து கிடக்கின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் போதையில் இருந்தவரை பார்த்தபோது உயிரிழந்து காணப்பட்டுள்ளார். இதனால் உயிரிழந்தவருடன் இணைந்து போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

## என் மீதான உங்களின் பிழையான புரிதல் என் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்

### ரணிலுக்குச் சாணக்கியன் கடிதம்



தனது நாடாளுமன்ற உரை தொடர்பான பிழையான புரிதல் காரணமாக தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கடந்த மே மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை மீளப்பெற வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை குறிப்பிட்டிருந்தார்.

20ஆவது அரசியமைப்புத் திருத்தம் உட்பட ☞2

## லிட்ரோ நிறுவனத்துக்கு புதிய தலைவர் நியமனம்




லிட்ரோ நிறுவனத்தின் புதிய தலைவராக முதித்த பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, அவர் நாளைமறுதினம் முதல் நிறுவனத்தின் தலைவராகக் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். ☞2

## தொடர்ந்து ஆறு நாள்களாக காஸ் விநியோகம் இல்லை

### மக்கள் பெரும் ஏமாற்றம்



இலங்கையில் தொடர்ச்சியாக 6ஆவது நாளாக இன்றும் சமையல் எரிவாயு விநியோகம் முன்னெடுக்கப்படமாட்டாது என நிறுவனத் தகவல்கள் தெரிவிக் கின்றன. நாட்டை வந்தடைந்துள்ள ☞2

## இலங்கை மீண்டேழ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

இலங்கை தற்போது பெரும் டொலர் நெருக்கடி மற்றும் கடன் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக் கும்நடவடிக்கையில்அரசுஈடுபட்டுள்ளது என்றும், ஆனால் அதிக எண்ணிக்கை யிலான தனியார் கடனாளிகள் காரணம ாகசிரமங்களைஅரசுஎதிர்கொள்கின்றது என்றும் அவர் கூறினார்.

இந்திய ஊடக வலையமைப்பான நிஜூநுஹி சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண நாட்டில் உள்ள அனைத்து அரசியல்வாதி களும் ஒன்றிணைய வேண்டும்.

கடன் உதவி தொடர்பில் அரசு தற்போது சர்வதேசநாணய நிதியத்துடன் கலந்துரையாடி வருகின்றது.

அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்உதவி கோரும் அதேவேளையில், தற்போது நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நன்கொடை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது.

இலங்கையின் கடன் நிலையான மட் டத்தில் இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கின்றது. எனவே, பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியால் முன் மொழியப்பட்டவாறு அரசு 2020இல் சர்வதேச நாணய நிதியத்தை அணுகியிருக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையால் சுட்டிக்காட் டியபடி, இலங்கை முழுக்க முழுக்க அவசரநிலையை எதிர்கொள்கின்றது. எனவே, உலக வல்லரசுகளின் ஆதரவு தேவை. ஏற்றுமதி சார்ந்த வணிக மாதி ரியை அறிமுகப்படுத்துவ தன் மூலம் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இலங்கையைப் போட்டித்தன்மை வாய்ந்த பொரு ளாதாரமாக மாற்ற வேண்டும் - என்றார்.

தனது இடைக்கால வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடனை மீளச் செலுத்துவதற்கும், அத்தி யாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும், நலிவடைந்த மக்க ளுக்கு நலன்புரி உதவிகளை வழங்கு வதற்கும், அரசின் வருவாயை அதி கரிப்பதற்காக வரி முறையை சீர்தி ருத்துவதற்கும் கூடுதல் நிதியை வழங்க வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்படும் - என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீண்டும் உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடாக மாற வேண்டும் என்பதால் நிதி ஒழுக்கத்தை உறுதி செய்வதில் நான் கவனம் செலுத்துகின்றேன்.

பொருளாதார மறுசீரமைப்புடன், நாட்டை உறுதிப்படுத்தும் அரசியல் சீர்திருத்தங்களை அரசு மேற் கொண்டுள்ளது.

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் போன்ற சில அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

மிகவும் தேவையான சீர்திருத்தங் களுக்கு அழுத்தம் கொடுக்கின்றேன். நாடாளுமன்றத்தில் அனைத்துத் தரப் பினரின் ஆதரவையும் நாடுகின்றேன் - என்றார்.

வெளிக் காரணிகள் குறித்து கருத்துத் தெரிவித்த பிரதமர்,

சீனா இலங்கைக்கு கடன் ஏற்பா டுகள்மூலம் உதவிசெய்துவருகின்றது. ஆனால், இந்தியா பல முனைகளில் அரசுக்குப் பெருமளவில் ஆதரவளித்து வருகின்றது.

இலங்கை இந்தியாவுடன் நெருக்கம ாகப் பணியாற்றி வருகின்றது. இந்திய அரச அதிகாரிகள் பலருடன் நான் பேச்சு நடத்தி வருகின்றேன்.

இலங்கை மக்களுக்கு ஆதரவளிப் பதும் பொருளாதாரத்தை மறுசீர மைப்பதும் காலத்தின் தேவையாகும்.

கூடிய விரைவில் நாட்டை உறுதி யான நிலைக்குக் கொண்டு வருவதற்கு எத்தகைய தியாகத்தையும் செய்ய நான் தயாராக இருக்கின்றேன். எனவே, அரசியல் களத்தில் இரு தரப்பிலிருந்தும் எனக்கு ஆதரவு தேவை - என்றார்.

## தந்தையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தவர் 66 வயதுடைய பரகடுவ, பொஹொரபாவ பகுதியைச் சேர்ந்தவராவார்.

குடிபோதையில் வந்த மகன் அவரது மனைவியைத் தாக்கியுள்ளார். இதன்போது மருமகளைக் காப்பற்ற முற்பட்ட தனது தந்தையைக் கட்டையால் அடித்து மகன் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையுடன் தொடர்புடைய 34 வயதுடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நோயாளி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிகிச்சை பெற்று வந்த மன்னார், நொச்சிக் குளம் பகுதியை சேர்ந்த நபர் மீதே கத்திக்குத்து தாக்குதல் இடம்பெற் றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் வைத்தி யசாலை விடுதியில் தங்கியிருந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின் றனர்.

அண்மையில் நொச்சிக்குளம் பகுதி யில் இரு சகோதரர்கள் வாள்வெட்டுத் தாக்குதலில் பலியாகிய நிலையில் வைத்தியசாலையில் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கத்தி குத்துக்கு இலக்காகியுள்ளமை மன்னார் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்ப டுத்தியுள்ளது.

## மீன்களின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாகவும், மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினாலும் இவ்வாறு மீன்களின் விலை கடுமையாக உயர்வடைந் துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, தலபத், கொப்பரை போன்ற மீன்கள் கிலோ ஒன்று 2 ஆயி ரத்து 200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன.

## இன்று கூடும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 21ஆவது திருத்தச் சட்டமூலம் கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பான இறுதி முடிவு இந்த வாரத்துக்கு ஒத்திவைக்கப் பட்டது.

எவ்வாறாயினும், அரசமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கு இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அமை ச்சரவை அங்கீகாரம் வழங்கவுள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

## கொச்சிக்கடை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாலை 4 மணிமுதல் மும்மொழிக ளிலும்திருப்பலிகள்ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், மாலை 5 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி இடம்பெறவுள்ளது.

## கொச்சிக்கடை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லிட்ரோ நிறுவனத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளராக இவர் இதற்கு முன்னர் கடமையாற்றி இருந்தார்.

## என் மீதான......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தமை காரணமாகவே பலரின் வீடுகள் எரியூட்டப்பட்டதாக சாணக்கியன் வெளியிட்ட கருத்து ஏற்பு டை ணயதல்ல. இந்தக் கருத்தின் மூலம் சாணக்கியன் நடந்த வன்முறைகளை ஏற்றுக்கொள்கின் றாரா? மரணத்தை ஏற்றுக்கொள்கின்றாரா? எனவும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில், இது குறித்து தெளிவு படுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பிவைத் துள்ள கடிதத்தி லேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் இரா. சாணக்கியன் மேற்கண் டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

கடந்த மே மாதம் 20ஆம் திகதி, எனது சமீபத்திய நாடாளுமன்ற உரை குறித்த ஒரு தெளிவுபடுத்துதலின் கட்டாயம் எனக்குள்ளது.

அதனடிப்படியில் நான் வன்முறை யைத் தூண்டக்கூடிய எந்தவொரு நடவடிக்கை லிலும் ஒருபோதும் ஈடுபடவும் இல்லை; ஆதரிக்கவும் இல்லை; ஊக்குவிக்கவும் இல்லை என்பதை நீங்கள் அவதானித்தி ருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

மூன்று தசாப்தங்களுக்கு மேல் பல விதம ான பாதிப்புக்களுக்கு உள்ளாகி யுள்ள ஓர் சமூகத்தை நான் பிரதிநிதித் துவப்படுத்துகின்ற போதிலும், சமா தானம், நல்லிணக்கம் ம ற்றும் அனைத்து சமூகத்தினரையும் உள்ள டக்கியதாகஅனைத்து இலங்கையர் களின் தேவைகள் மற்றும் அபிலாஷை களுக்காக நான் குரல் கொடுத்து வருகின்றேன்.

நாம் பல சமூக பிளவுபடுவதைவிட ஒன்றாக இருப்பதில் இலங்கையர்களின் பன்முகத்தன்மையே எங்களின் பலமாக இருக்க வேண்டும் என்பதில் எனது கருத்துக் களில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

மே 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் தங்கள் குறைகள், தேவைகள் மற்றும் அபிலா ஷைகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக உணர்ந்ததால் தான், மக் கள் வன்முறையான முறையில் எதிர் வினையாற்றினார்கள் என்று உரைத்தி ருந்தேன். தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுக்கு வாக்களித்த ம க்களின் நலனைப் பாதுகாப்பதில் தங்கள் கட்டாயக் கடமைகளில் இருந்து தவறிவிட்ட தாக அவர்கள் ஒருவேளை உணர்ந்தி ருக்கலாம். என்னுடைய இந்தக் கூற்று தவறாகப் புரிந்துகொள் ளப்படுள்ளது.

எனவே, இதன் காரணமாகவே அவர் களுக்கு எனது நிலைப்பாட்டை விளக்குவது எனது தார்மீகக் கடமை என்று உணர்கின் றேன். அந்தவகை யில், எனது அறிக்கை களின் உண்மைத்தன்மையை பிரதமர் சரிபார்த்து, இது தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

உங்களுக்குத் தெரியும், இது போன்ற ஒரு மிகத் தீவிரமான அறிக்கை, அது நாட்டின் பிரதமரிடமி ருந்தும், குறிப்பாக உங்களைப் போன்ற அந்தஸ்துள்ள ஒருவரிடமிருந்தும் வெளிப்படும்போது, பொதுமக்கள் அதை சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மை என்று கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ள முடியும். இது எனது நற்பெயருக்கு ஈடுசெய்ய முடி யாத களங்கத்தை ஏற்படுத்தும் அதே வேளையில் எனது உயிருக்கும் அச்சுறுத்தலாக அமையும். இந்த நேரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து எதி ர்பார்க்கப்படும் முன்னுரிமையும் காலத்தின் தேவையும், இந்த நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதும், அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதும், மூன்று வேளை உண வையும் உறுதிப்படுத்துவதும், அவர்களை இந்தத் துயரத்திலிருந்து விடு விப்பதும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நாட்டு மக்களுக்கு ஆறுதல் அளிக்கும், அவர்களுக்கு உடனடி மற் றும் நிலையான நிவாரணம் அளிக்கும், அவர்களின் தற்போதைய குறைகள் மற்றும் எதிர்கால நல்வாழ்வுக்காக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் நான் என்றும் ஆதரிப்பேன் – என்றுள்ளது.

## அனுமதியின்றி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பத்திரம் இன்றி ஏற்றி வந்த குற்றச்சாட்டி லேயேஇவர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், இவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதி வான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

## தொடர்ந்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமையல் எரிவாயுக் கப்பலில் இருந்து இதுவரை எரிவாயு விடுவிக்கப்படாமையால் எரிவாயு விநியோகிக்க முடியாத நிலை காணப்படுகின்றது எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

குறித்த கப்பல் கடந்த 8ஆம் திகதி நாட்டை வந்தடைந்த நிலையில் இதுவரை விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த எரிவாயு கொள்கலன் தொடர்பில் இன்று தீர்மானம் அறிவிக்கப்படும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், குறித்த கப்பலில் இருந்து சமையல் எரிவாயுவைத் தரையிறக்க முடிந்தாலும், விநியோகிப்பதற்கு மேலும் சில நாட்கள் தேவைப்படுகின்றன எனவும் குறிப்பிடப்டுள்ளது.

இதன் காரணமாக சமையல் எரிவாயு சிலிண்டர் கொள்வனவுக்காக இன்றும் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் எனவும் லிட்ரோ நிறுவனம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

## 8 வயது......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட சிறுமி ஹைபொரஸ்ட் இலக்கம் – 01 தோட்டப் பாடசாலையில் தரம் 3இல் கல்வி கற்கும் காவியா என அழைக்கப்படும் இராஜம ாணிக்கம் விசாந்தினி அடையாளம் காணப்பட்டுள்ளது. வீட்டின் வாசல் பகுதி யில் உள்ள கூரைக் கம்பத்தில் சேலைப்பட்டி யில் கழுத்து இறுகியவாறு சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனக் ஹைபொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம் பெற்ற அன்று, சிறுமி தனது வீட்டுக்கு முன்பாக உள்ள முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தார் எனவும், தாய் மலசலகூடத்துக்குச் சென்றிருந்தார் எனவும் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. தாய் மலசலகூடத்திலிருந்து வெளியே வந்து பார்த்தபோது, சிறுமியின் கழுத்து சேலையில் இறுகியிருந்துள்ளதை அவதானித்துக் கூக்குரலிட்டு அயலவர்களை அழைத்துள்ளார். இதையடுத்து சிறுமியின் கழுத்தில் இறுகியிருந்த சேலைப் பட்டியை அப்புறப்படுத்திய அயலவர்கள், சிறுமியை ஹைபொரஸ்ட் பிரதேச வைத்தியசாலைக் குக் கொண்டு சென்றுள்ளனர்.

எனினும், பரிசோதித்த வைத்தியர், சிறுமி ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்ததைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்காக சிறுமியின் சடலம் இன்று காலை நுவரெலியா மாவட்ட வைத்தி யசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

## ஆணின் சடலம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனினும், சடலமாக மீட்கப்பட்ட நபர் யார் என்பது தொடர்பில் இதுவரை அடை யாளம் காணப்படவில்லை என மதுரங் குளிப்பொலிஸார்தெரிவித்தனர். மதுரங்குளி பகுதியில் டீசல் பெறுவதற்காக நீண்ட வரிசையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் அதனை அண்டிய வடிகானுக்குள் இருந்தே இவ்வாறு சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வடிகானுக்குள் சடலம் ஒன்று கிடப்பதாக மதுரங்குளி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற மதுரங்குளிப் பொலிஸார், விசாரணைகளை ஆரம்பித்தனர். சடலமாக மீட்கப்பட்ட நபர், டீசல் கொள்வனவு செய்ய வந்தவரா என்பது தொடர்பில் விசாரணை களை மேற்கொண்டு வருவதாகவும் பொலி ஸார் குறிப்பிட்டனர். அத்துடன், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை நடத்தினர். அத்துடன், நீதிவான் விசார ணையின் பின்னர் சடலம் பிரேத பரிசோத னைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் தடயவியல் பிரிவின ருடன் இணைந்து மதுரங்குளிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கனவு காணாதீர்கள்!

நெருக்கடியில் சிக்கியுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்க 'ஆபத்பாந்தவன்' தோற்றமளித்து வந்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வரை குடுகுடுப்பைக்காரன் மாதிரி 'கெட்ட காலம் வருகுது... கெட்ட காலம் வருகுது' என்று அபசகுனம் போன்று வழி மொழிந்து கொண்டிருந்தார்.

இப்போதுதான் நல்ல காலம் பிறப்பது பற்றிப் பேசத் தொடங்கியிருக்கிறார்.

இந்திய ஊடக வலையமைப்பு ஒன்றுக்குப் பேட்டி அளித்த அவர், தற்போதைய நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு, நாட்டின் பொருளாதாரம் உறுதித் தன்மையை எட்வதற்கு சுமார் 18 மாதங்கள் – ஒன்றரை வருடங்கள் – செல்லும் என்று கூறியிருக்கிறார்.

பிரதமராகப் பதவியேற்ற பின்னர் நாட்டின் மீட்சி தொடர்பில் அவர் வழங்கிய முதல் உறுதியுரை அல்லது எதிர்வு கூறல் இதுதான். இப்போதுதான்.

அதுவும் கூட, அப்படி நாடு மீட்சி பெறுவதற்குத் தாம் வைத்துள்ள அல்லது கொண்டுள்ள உத்தேச திட்டங்கள் என்ன, அவற்றின் கால அளவீடுகள் யாது என்பவை பற்றியெல்லாம் அவர் வெளிப்படுத்தாமல் – பொத்தம் பொதுவில் – இதனைக் கூறியிருக்கிறார். அதாவது தமது துரும்புச் சீட்டுகளை வெளிப்படுத்தாமல், நெஞ்சுக்கு மிக நெருக்கமாக வைத்து அவர் விளையாட விரும்புகிறார் போலும்.

ரணிலின் இந்த புதிய அறிவிப்புக்குள் சூட்சுமமான ஒரு விடயம் பொதிந்திருப்பதை அவரை ஆட்சி அதிகாரத்துக்கு கொண்டு வந்தோரும், கொண்டுவந்த தரப்பிலிருந்து கொண்டு அவருக்கு தடுக்குப் போட்டுக் கொண்டிருப்போரும், தவிரவும், நாட்டு மக்களும் கவனிக்க வேண்டும். ஒன்றரை வருடத்தில் மீட்சி என்ற அவரது கூற்றுக்குள் ஒன்றரை வருடத்துக்கு முன்னர் உடனடியாக மீட்சி ஏதும் கிட்டி விடும் என்று எதிர்பார்க்காதீர்கள் என்ற உறைப்பான கருத்தும் பொதிந்து கிடக்கின்றது என்பதுதான் அது.

ரணில் பிரதமராக வந்துவிட்டார், நாட்டுக்கு வரக்கூடிய நெருக்குவாரத்தை விரைவில் தணிப்பார் என்றும் –

உடனடி மீட்சிகள், நெருக்குவார விடுவிப்புகள் கிட்டும் என்றும் –

கனவு கண்டோருக்கு பிரதமர் ரணிலின் முதல் பதில் இதுதான்.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து இறங்கினாலும் தொடர்வது என்னவோ அவரது பொது ஜன பெரமுன கட்சியின் ஆட்சிதான். கட்சிக்குள் மாற்றான – தோதான – பொருத்தமான – சமாளிக்ககூடிய – ஒருவர் பிரதமர் பதவிக்கு இல்லாமையால் நாடாளுமன்றத்தில் தனி மரமாக நின்ற ரணிலைக் கூட்டி வந்து, பொது ஜன பெரமுன அரசின் பிரதமர் பதவியை பார்க்க விட்டிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இதுதான் யதார்த்தம். பொது ஜன பெரமுனவின் பிரதிநிதியாக – பிரதமராக – இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவினால் ஒன்றும் புதிதாக வெட்டிப் பிடுங்கி விட முடியாது. அவரின் வருகையால் அதிரடி மாற்றங்கள் வந்து விடும் என்று கற்பனை பண்ணியோர் அது பகல் கனவு என்பதை உணர்ந்து கொள்வது நல்லது.

ஒன்றரை வருடங்களில் கூட நாட்டை நிமிர்த்துவதற்கு அவரிடம் காரிய சாத்தியமான – யதார்த்த பூர்வமான – திட்டங்கள், மூலோபாயங்கள், யோசனைகள், தந்திரோபாயங்கள் போன்றன இருப்பதாகக் கூடத் தெரியவில்லை.

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை முன்வைக்கப் பிரதமர் தவறிவிட்டார்!

### கம்மன்பில குற்றச்சாட்டு

பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவியேற்று ஒரு மாதமாகியும் நாட்டை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான எந்தவொரு திட்டத்தையும் முன்வைக்கவில்லை என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில் –

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு கடந்த மார்ச் மாதம் அரசாங்கத்தாலோ அல்லது எதிர்க்கட்சியினரோ 'ஹரி மக' என்ற செயற்திட்டத்தை முன்வைத்ததை தவிர பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை இதுவரை முன்வைக்க முடியவில்லை.

இதேவேளை, அவர்களால் நாட்டில் முன்வைக்கப்பட்ட செயற்திட்டம் அமைச்சுக்களில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர் அதிகம் பேசப்படவில்லை எனவும், அதற்கு பதிலாக அவர்கள் அமைச்சு பதவிகளில் இருந்து நீக்கப்பட்டமையே பேசுப்பொருளாக மாறியது. – என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் பிரதமரின் நியமனம் முடிந்த உடனேயே அவரை சந்தித்தோம். அந்த சந்திப்பில், மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில், கால அடிப்படையிலான செயல்திட்டத்தை முன்வைப்பதன் முக்கியத் துவத்தை விளக்கியதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆடை கொள்வனவு செய்தால் அரிசி இலவசமாக வழங்கப்படும்

இலங்கையின் பிரபல ஆடை நிறுவனங்கள் புதிய திட்டத்தை அறிமுகம் செய்து வருவதாக செய்தி வெளியாகியுள்ளது.

அதற்கமைய, பத்தாயிரம் ரூபா அல்லது அதற்கு மேல் ஆடை அல்லது பொருள்களை வாங்கினால் ஐந்து கிலோ அரிசியை வழங்குவதற்கு நாட்டின் பிரபல ஆடை நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

மேலும், 5 ஆயிரம் ரூபா அல்லது அதற்கு மேல் மதிப்புள்ள ஆடை அல்லது பொருள்களை வாங்கினால், சூப்பர் மார்க்கெட்டில் பொருள்கள் கொள்வனவு செய்யும் வகையில் வவுச்சர்கள் வழங்கும் நடவடிக்கைகளும் ஆரமபிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 10 ஆயிரம் ரூபாய்க்கு ஆடை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு, பைகள், குடை, உணவுப் பாத்திரங்கள் உட்பட பரிசுப் பொருளகளை முன்பெல்லாம், இந்த ஆடை நிறுவனங்கள், வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்னைய ஜனாதிபதிகளின் தவறுகளும் நாட்டின் தற்போதைய நிலைக்கு காரணம்

### ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



முன்னைய ஜனாதிபதிகளின் நடவடிக்கை கள் காரணமாகவும் நாங்கள் தனிமைப்ப டுத்தப்பட்டுள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவித்துள்ள ஹர்ஷ டி சில்வா–

முன்னாள் ஜனாதிபதிகள் தவறான முடிவுகளை எடுத்தார்கள் அதுவே தற்போது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

வியட்நாம்பங்களாதேஸ் போன்ற நாடுகள் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் முன்னோக்கி நகர்ந்த அதேவேளை உள்நோக்கி சிந்திக்கும் கொள்கைகள் காரணமாக இலங்கை தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுஎனவும்குறிப்பிட்டுள்ளார். மத்திய கிழக்கு நாடுகள் கூட இலங்கைக்கு உதவத் தயாரில்லை என அவர் தெரிவித்துள்ளார். தற்போதைய சூழ்நிலையி;ல் கூட சவூதி அரேபியாவும் ஐக்கிய அரபு இராச்சியமும் இலங்கைக்கு உதவிவழங்கத் தயாரில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# லிற்றோ நிறுவன புதிய தலைவராக முதித பீரிஸ் நியமனம் பெற்றார்!




லிற்றோ நிறுவனத்தின் புதிய தலைவராக லிற்ரேறா நிறுவனத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் முதித பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, அவர் இன்று முதல் நிறுவனத்தின் தலைவராகக் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

லிற்றோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் விஜித ஹேரத் அண்மையில் இராஜினாமா செய்தமையையடுத்து, புதிய தலைவராக முதித பீரிஸை நியமிப்பது சரியான தருணம் என லிற்றோவின் தொழிற்சங்கங்கள் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன்று 6 ஆவது நாளாகவும் எரிவாயு விநியோகத் தடை!

தொடர்ந்து 6 ஆவது நாளாக இன்றும் (திங்கட்கிழமை) எரிவாயு விநியோகம் இருக்காது என லிற்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி நாட்டை வந்தடைந்த எரிவாயுக் கப்பலை இதுவரை விடுவிக்க முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலின் உள்ள எரிவாயுவிற்கு 25 லட்சம் அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சில நாள்களாகவே நுகர்வோர் எரிவாயு பெற வரிசையில் காத்திருக்கின்றதை காணக் கூடியதாக இருக்கின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அமெரிக்காவின் சிகாகோ நகரில் துப்பாக்கிச் சூடு ; 5 பேர் பலி: 16 பேர் காயம்




அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும் துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் காயம் அடைந்தனர்.




# நட்புறவை பாதுகாப்பது இருநாட்டுக்கும் நல்லது: சீன பாதுகாப்பு அமைச்சர் பேச்சு

கிழக்கு லடாக்கில் உள்ள பாங்காங் ஏரி எல்லை கட்டுப்பாட்டு பகுதி பிரச்னையில் இந்தியா-சீனா இடையே கடந்த 2020ம் ஆண்டு மே மாதம் முதல் மோதல் போக்கு நீடித்து வருகிறது. இரு தரப்பிலும் நடத்தப்பட்ட 15 சுற்று பேச்சுவார்த்தையின் முடிவில், பாங்காங் ஏரியின் வடக்கு மற்றும் தெற்கு, கோக்ரா பகுதியில் இரு தரப்பும் படைகளை விலக்கி கொண்டன. இந்நிலையில், 2 நாள்கள் நடைபெறும் ாங்ரி-லா பேச்சுவார்த்தையில் பங்கேற்க சிங்கப்பூர் வந்துள்ள சீன பாதுகாப்பு அமைச்சர் வெய், தென் சீனக் கடல் உள்ளிட்ட பிராந்திய பிரச்னைகளுக்கு அமைதியான வழியில் சுமூகமான தீர்வு காண வழிவகுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த வெய், "அண்டை நாடுகளான இந்தியாவும் சீனாவும் நட்புறவைப் காப்பது நல்லது. இது, இரு நாடுகளின்நலன்களையும்பூர்த்திசெய்யமுடியும்" என்று தெரிவித்தார்.



# பிரான்ஸ் பொது தேர்தல் முதல் கட்ட வாக்குப்பதிவு

பிரான்ஸ் நாட்டில் நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் இடதுசாரி கூட்டணி வலுவாக இருப்பதால், அதிபர் மேக்ரானின் ஆளும் கூட்டணிக்கும் அதற்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. இதனால் தனிப் பெரும்பான்மை கிடைப்பது கேள்விக்குறியாகி உள்ளது. பிரான்ஸ் நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த அதிபர் தேர்தலில், மீண்டும் போட்டியிட்ட இம்மானுவேல் மேக்ரான் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட வலதுசாரி வேட்பாளர் லி பென் 2வது இடத்தை பிடித்தார்.

இதைத் தொடர்ந்து, மொத்தம் 577 உறுப்பினர்களைக் கொண்ட பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தலின் முதல் சுற்று ஜூன் 12ம் தேதியும், 2வது சுற்று வரும் 19ம் தேதியும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தலின் முதல் கட்ட வாக்குப்பதிவு நேற்று நடந்தது. இதில், 18 முதல் 92 வயது வரையிலான 6,000க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இடதுசாரி தலைவர் ஜீன் லுக் மெலன்கோன் தலைமையிலான இடதுசாரிகள், பசுமைக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் அடங்கிய எதிர்க்கட்சிகளின் இடதுசாரி கூட்டணி வலுவடைந்திருப்பதால், மேக்ரானுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்குமா? என்பது கேள்வி குறியாகி உள்ளது.



# எங்கள் நாட்டு மக்கள் மீது தாக்குதல் நடத்துவதா?

பாகிஸ்தானின் மூத்த முப்படை ராணுவக் குழு கடந்த 9ந் தேதி முதல் 12ந்தேதி வரை சீனாவுக்குச் சென்று சீன ராணுவம் மற்றும் பிற அரசுத் துறைகளின் மூத்த அதிகாரிகளுடன் பல்வேறு விவகாரங்கள் குறிதது விவாதம் நடத்தியது. இதன் ஒரு கட்டமாக பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஜெனரல் கமர் ஜாவேத் பஜ்வா சீன ராணுவ ஜெனரல் ஜாங் யூக்ஸிங்-ஐ சந்தித்து சர்வதேச மற் றும் பிராந்திய பாதுகாப்பு நிலைமைகள் குறித்த பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது பாகிஸ்தானின் பலுசிஸ்தான் பகுதியில் சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத் திட்டங்களில் பணிபுரியும் தங்கள் நாட்டு மக்களை குறி வைத்து நடத்தப்படும் தாக்குதலை நிறுத்துமாறு சீன அரசு பாகிஸ்தான் ராணுவ தளபதியிடம் வலியுறுத்தியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. பலூச் கிளர்ச்சியாளர்கள் சீனாவின் உள்கட்டமைப்புத் திட்டங்களான எரிவாயுக் குழாய்கள் மற்றும் மின்சாரக் கோபுரங்கள் போன்றவற்றைத் தொடர்ந்து குறிவைத்து வருவது குறித்தும் இந்த பேச்சில் விவாதிக் கப்பட்டது.

இதையடுத்து சீன மக்கள் தாக்கப்படுவதை தடுக்க தேவையான பணியாளர்கள் மற்றும் தளவாடங்களுடன் மத்திய காவல் அலுவலகத்தில் வெளி நாட்டுப் பாதுகாப்புப் பிரிவை அமைக்க இஸ்லாமாபாத்காவல்துறைமுடிவுசெய்துள்ளதாக கூறப் படுகிறது.



# நாங்கள் இணைந்தால் ஒட்டுமொத்த ஐரோப்பிய ஒன்றியமும் வலிமைபெறும்- ஜெலன்ஸ்கி

உக்ரைனின் தென்கிழக்கு கெர்சன் மற்றும் ஜபோரிஜியா பிராந்தியங்களில், ரஷ்ய படைகளிடம் இருந்து கிராமங்கள் மற்றும் நகரங்களை உக்ரைன் படைகள் மீண்டும் கைப்பற்றிவிட்டதாக அந்நாட்டின் அதிபர் ஜெலன்ஸ்கி கூறி உள்ளார்.

எனினும், சிவியரோடோனெட்ஸ்க் பகுதியில் இன்னும் சண்டை தொடர்ந்து நடைபெறுவதாக குறிப்பிட்டுள்ளார். விரைவில் ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா, உக்ரைனுக்கு சென்று ஜெலன்ஸ்கியைச் சந்தித்து பேசினார். அப்போது, ஐரோப்பிய ஒன்றியத்தில் சேருவதற்கான உக்ரைனின் கோரிக்கை குறித்து, அடுத்த வார இறுதிக்குள் முடிவு செய்யப்படும் என்று கூறிய நிலையில், ஜெலன்ஸ்கி தனது நம்பிக்கையை வெளிப்படுத்தி உள்ளார். உக்ரைனுக்கு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் என்ற அந்தஸ்து வழங்கும் முடிவு உக்ரைனை மட்டுமல்ல, முழு ஐரோப்பிய ஒன்றியத்தையும் வலுப்படுத்தும் என்றும் ஜெலன்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மேகதாது திட்ட அறிக்கை குறித்து விவாதிக்கும் அறிவிப்பு காவிரி ஆணையத் தலைவருக்கு அன்புமணி கண்டனம்



டெல்லியில் வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டத்தில், மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து விவாதிக்கப்படும் என்று ஆணையத் தலைவர் எஸ்.கே.ஹல்தர் கூறியிருக்கிறார். ஆணையத்திற்கு அதற்கான அதிகாரம் இல்லை என்று தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில், அதையும் மீறி மேகதாது அணைக்கான திட்ட அறிக்கை குறித்து விவாதிக்கப் போவதாக ஆணையத் தலைவர் கூறுவது கண்டிக்கத்தக்கது, என்று பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டத்தில் மேகதாது அணைக்கான திட்ட அறிக்கை குறித்து விவாதிக்கப்பட இருப்பதாக கடந்த 7 ஆம்திகதிசெய்திகள்வெளியானபோது, ஆணையத்தின் செயலுக்கு முதன்முதலில் கண்டனம் தெரிவித்தது பா.ம.க. நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள்தான்.

மேகதாது அணைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க காவிரி ஆணையத்திற்கு அதிகாரம் கிடையாது, நடுவர் மன்றத் தீர்ப்பை செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட மேலாண்மை ஆணையம், தமிழகத்தின் ஒப்புதல் இல்லாமல் மேகதாது அணை கட்ட முடியாது என்ற நடுவர் மன்றத் தீர்ப்புக்கு எதிராக எவ்வாறு செயல்பட முடியும்? மேகதாது அணை தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், அந்த அணைக்கு அனுமதி அளிப்பது குறித்து எவ்வாறு ஆணையம் விவாதிக்க முடியும்? என்று வினா எழுப்பிய மருத்துவர் அய்யா, இது குறித்து உச்சநீதிமன்றத்தில் முறையிட வலியுறுத்தினார்.

தமிழ்நாடு அரசும் அதே காரணங்களின் அடிப்படையில், உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்ததுடன், வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் மேகதாது பற்றி விவாதிக்கக்கூடாது என்று காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு கடிதமும் எழுதியது. ஆனால், தமிழக அரசின் எதிர்ப்பை பொருட்படுத்தப் போவதில்லை என்றும், திட்டமிட்டபடி வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் மேகதாது குறித்து கண்டிப்பாக விவாதிக்கப்படும் என்றும் ஆணையத் தலைவர் ஹல்தர் கூறியிருப்பது ஒருதலைபட்சமானது என்பது மட்டுமின்றி, மேகதாது அணைக்கு ஒப்புதல் அளிக்க காவிரி ஆணையம் துடிப்பதையே காட்டுகிறது.

காவிரி ஆற்றின் குறுக்கே புதிய அணை கட்டுவதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு வழங்கப்படவில்லை. ஆணையத்தின் அதிகார வரம்புகளை குறிப்பிட்டு மத்திய அரசு வெளியிட்ட அரசாணைதான் ஆணையத்திற்கான அரசியலமைப்புச் சட்டமாகும். அதன்படிதான் ஆணையம் செயல்பட வேண்டும். மாறாக, மேகதாது அணை குறித்து விவாதித்து முடிவெடுக்க ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு என்று மத்திய அரசு வழக்கறிஞர் சட்டக் கருத்து வழங்கியதால் மட்டுமே, அந்த அதிகாரம் வந்து விடாது. மத்திய அரசு வழக்கறிஞரின் சட்டக் கருத்து உச்சநீதிமன்றத்தில் செல்லாது.

மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கை குறித்து விவாதிப்பது இன்றைய நிலையில் அதி முக்கியத்துவம் வாய்ந்த விவகாரம் இல்லை. ஆணையத்தின் கூட்டத்தில் இது பற்றி விவாதிக்கக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்குத் தொடர்ந்துள்ளது. அந்த வழக்கு அடுத்த சில நாட்களில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம்.

அதன்பின்னர் இந்த விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுப்பதால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

ஆனால், இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், இந்த வியத்தில் ஆணையம் அவசரம் காட்டுவது ஏன்? மேகதாது வியத்தில் ஒரு சார்பாக செயல்படும் ஆணையத் தலைவரை நீக்க வேண்டும் என்று மத்திய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்த வேண்டும், என்று தனது அறிக்கையில் பா.ம.க. தலைவர் அன்புமணி வலியுறுத்தியிருக்கிறார்.



## யோகாவை தினசரி வழக்கமாக மாற்றுங்கள் இந்தியப் பிரதமர் மோடி வேண்டுகோள்

சர்வதேச யோகா தினம் வரும் ஜூன் 21 ஆம் திகதி உலகளவில் கடைப்பிடிக்கப் படவிருக்கிறது. இது குறித்து பிரதமர் மோடி கூறுகையில், சர்வதேச யோகா தினம் இன்னும் சில நாட்களில் உலகளவில் அனுசரிக்கப்படப் போகிறது. யோகாவின் பலன்கள் எண்ணற்றவை. மக்கள் யோகாவை தங்கள் அன்றாட வழக்கத்தின் ஒரு பகுதியாக மாற்ற வேண்டும், என்று குறிப்பிட்டிருக்கிறார். நமது அன்றாட வாழ்வில் யோகா, என்ற யூடியூப் தளத்தையும் மோடி அறிமுகம் செய்துவைத்துள்ளார்.

## தமிழகத்தின் முக்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணி மாற்றம் மருத்துவச் செயலாளர் ராதாகிருஷ்ணனுக்கு வேறு பொறுப்பு



தமிழகத்தின் முக்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதன்படி ஏற்கனவே கூட்டுறவு, உணவு நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் கூடுதல் தலைமை செயலராக இருந்த பணீந்திர ரெட்டி தமிழகத்தின் புதிய உள்துறைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். உள்துறைச் செயலராக இருந்த எஸ்.கே பிரபாகர் வருவாய் நிர்வாக ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல் தமிழகத்தின் முந்தைய ஆட்சியில் சுகாதாரத்துறைச் செயலராகவும் தற்போதைய ஆட்சியில் மருத்துவத்துறைச் செயலராகவும்பணிபுரிந்துவந்தராதாகிருஷ்ணன் கூட்டுறவு, உணவு நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளார். மருத்துவத்துறையின்புதியசெயலாளராககு.செந்தில்குமார் ஐ.ஏ.எஸ். நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருச்சி மாவட்ட ஆட்சியராக இருந்த சிவராசு, கோவை வணிக வரித்துறை இணை ஆணையராக மாற்றப்பட்டுள்ளார்.

வணிக வரித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையராக தீரஜ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார். ஆவின்நிறுவனத்தின்ஆணையராக இருந்த பிரகாஷ் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட்டின் முதன்மைச் செயலாளர் பிரதாப் யாதவும் மாற்றப்பட்டுள்ளார். நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் முதன்மைச் செயலாளராக அவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## மண்ணில் புதைந்த நிலையில் கண்டறியப்பட்ட 400 ஆண்டுகள் பழமையான மாலைக் கோவில்



மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரியின் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனீஸ்வரன், முனைவர் லட்சுமண மூர்த்தி ஆகியோர் மாணவர்களுடன் மேற்பரப்பு கள ஆய்வு மேற்கொண்ட போது, விமான நிலையத்துக்குப் பின்புறமாகவுள்ள இடத்தில் மண்ணில் புதைந்த நிலையில் கலை நுட்பத்துடன் கூடிய கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சதிக்கல் கண்டுபிடிக்கப்பட்டது.

புதைந்த நிலையில் கண்டறியப்பட்ட சதிக்கல் தோரணவாயில் கலைநயத்தோடு 4 அடி உயரம் 3 அடி அகலமும் கொண்டதாக இருந்தது. கல் சிற்பத்தில் ஆண் மற்றும் பெண்ணின் தலையின்கொண்டைப்பகுதிசற்றுசாய்வாகவும், ஆடவன் கையில் நீண்ட கத்தியும், அணிகலன்களுடன் கால் பகுதியை மடக்கி தொங்க விட்டு அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இக்கல் சிற்பத்தை மக்கள் மாலைக்கோவில் என்று வழிபடுகின்றனர்.

நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் மையமாகக் கொண்ட மதுரையைச் சுற்றி பல குறுநில மன்னர்கள் ஆண்ட வரலாற்றுத் தடயங்கள் புதைந்த நிலையில் கேட்பாரற்று காணப்படுவதாகவும், இதுபோன்ற கற்சிற்பங்களைப் பாதுகாத்தால் நமது வரலாற்று சுவடுகளை அழியாமல் பாதுகாக்க முடியும் என்றும் வரலாற்றுஆய்வாளர்கள்வலியுறுத்தியுள்ளனர்.



## ஜம்மு காஷ்மீர் புல்வாமாவில் தேடுதல் வேட்டை 3 லஷ்கர் இ தொய்பா ஆயுததாரிகள் சுட்டுக்கொலை


ஜம்மு காஷ்மீரில் கடந்த சில தினங்களாக சிறுபான்மையினரை ஆயுததாரிகள் கொலை செய்வது அதிகரித்து வரும் நிலையில், அவர்களைக் கண்டறியும் தேடுதல் வேட்டையை இந்திய ராணுவத்தினரும் பொசிலாரும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

அவ்வகையில் நேற்று புல்வாமா மாவட்டத்தின் டிராம்கம் பகுதியில் இருந்த ஆயுததாரிகளை பொலிசார் சுற்றிவளைத்த போது, இருதரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 12 மணி நேரம் நீடித்த இந்தச் சண்டையில், லஷ்கர் இ தொய்பா அமைப்பைச் சேர்ந்த 3 ஆயுததாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவர்களிடம் இருந்து துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையில்அவர்கள் மூவரும் உள்ளூரைச்சேர்ந்தவர்கள் என்பதும் கடந்த ஆண்டுதான் இவர்கள் லஷ்கர் இ தொய்பா அமைப்பில் இணைந்ததும் கண்டறியப்பட்டுள்ளதாக காஷ்மீர் பொலிசார் தெரிவித்துள்ளனர். இந்த ஆண்டில் இதுவரை 99 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டிருப்பதாக காவல்துறை அதிகாரியான ஐ.ஜி. விஜய குமார் குறிப்பிட்டிருக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# திருகோணமலை சேருநுவரவில் காட்டு யானைகள் அட்டகாசம்


திருகோணமலை – சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள, லிங்கபுரம் கிராமத்திற்குள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காட்டு யானைகள் உட்புகுந்து சேதம் விளைவித்துள்ளன.

இதன்போது இரண்டு வீடுகளை யானைகள் சேதப்படுத்தியுள்ளன. அத்தோடு வீட்டிலிருந்து உபகரணங்கள் பயன்தரும் வாழை மரங்கள், கரும்பு போன்றவற்றையும் துவம்சம் செய்துள்ளன. வீட்டிலிருந்தவர்கள் யானைகளிடம் சிக்காமல் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இதுகுறித்து லிங்கபுரம் பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில் –

"தொடர்ச்சியாக எமது பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதுவரை 10 பேர் காட்டு யானைகளால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். பலர் அங்கவீனம் அடைந்துள்ளனர். வீடுகளில் இருப்பது அச்சமாக உள்ளது. எமது உடமைகளையும், பயிர்களையும் காட்டு யானைகள் அடித்து சேதமாக்குகின்றன. இதுவிடயமாக அதிகாரிகளிடம் முறையிட்டால் அவர்களும் பெரிதாகக் கவனத்தில் கொள்வதில்லை. – என்றனர்.

## மண்டூர் அசோகாவின்நூல் மட்டக்களப்பில் வெளியீடு




(க.கிருபாகரன்)

'மகுடம் கலை இலக்கிய வட்டம்' நடத்தும் மண்டூர் அசோகாவின் 'எழுதப்படாத கவிதைகள்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நாளை செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோறளைப்பற்று மேற்குப் பிரதேச செயலாளர் வெ.தவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் செ.யோகராசா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற் கைகள்துறை சிரேஷ்ட விரிவுரையா ளர் திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ் ஆகியோர் அதிதிதிகளாகக் கலந்து கொள்ள வுள்ளனர்.

நூலுக்கான வெளியீட்டுரையை மகுடம் வி.மைக்கல் கொலினும், மதிப்பீட்டுரையை எழுத்தாளர் உமா.வரதராஜனும், ஏற்புரையை நூலாசிரியை மண்டூர் அசோகாவும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதல் பிரதியினை மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப்புலவர் வி.ரஞ்சிதமூர்த்தி பெற்றுக் கொள்வார்.

## போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் மட்டக்களப்புக் கிளை இடம் மாற்றம்






(மட்டக்களப்பு விசேட நிருபர்)

போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் மட்டக்களப்புக் கிளை தற்போது மட்டக்களப்பு நகர் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவக பொறுப்பதிகாரி தர்மலிங்கம் ஹரிதேவா தெரிவித்துள்ளார்.

கடந்த 6 வருட காலமாக மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியின் கல்லடி பகுதியில் சாரதிகளுக்கான மருத்துவ சான்றிதழ்களை வழங்கும் சேவையினை வழங்கி வந்த தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் தற்போது மட்டக்களப்பு பார் வீதியில், திறந்த பல்கலைக்கழகத்திற்கு முன்னால் அதிநவீன வசதியுடனான கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இங்கு சாரதி மருத்துவ சான்றிதழ் வழங்கும் சேவையைப் பொது மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவக பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் மருத்துவ சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் சாரதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இலகுபடுத்தும் வகையிலும், இடப்பற்றாக்குறை காரணமாக ஏற்படுகின்ற அசௌகரியங்களை குறைக்கும் வகையிலும் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.



## திருமலை குடாக்கரைக்கு இனி சீரான நீர் விநியோகம்

(ஹஸ்பர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட குடாக்கரை பகுதிக்கான நீர் விநியோகத் திட்டத்தை சீரமக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மூலம். இப்பகுதிக்கு விநியோகிக்கப்படுகின்ற நீர் விநியோகம் அனைத்து குடும்பங்களுக்கும் தினந்தோறும், வேகமாகவும், வீச்சாகவும் கிடைக்கப்பெறுவதில்லை என அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வந்தது.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருமாறும் பொதுமக்களும் அப்பகுதி பொது நிறுவனங்களும் கோரி வந்தன. திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் உப தவிசாளர் முகமட் நௌபரிடம் எழுத்து மூலமான கோரிக்கையும் அப்பகுதி மக்களால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் ஓர் அங்கமாக குடாக்கரை பிரதேசத்தில் ஆழ்துளை குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் மக்கள் பங்களிப்புடன் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் உப தவிசாளர் முகமட் நௌபரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# நாட்டின் அசாதாரண சூழ்நிலையே தேர்தல் நடத்தாமைக்கு காரணம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் நிமல் ஜி.புஞ்சிஹேவா கருத்து

பொது தேர்தலை நடத்துவதற்கு நாட்டில் தற்போது சாதகமான சூழல் இல்லை என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

நாட்டிலுள்ள அனைத்து மக்களும் தமது நாளாந்த வாழ்க்கையை நடத்துவதற்கான தேவையான எரிபொருள் மற்றும் எரிவாயுவின் கடுமையான தட்டுப்பாடு காரணமாக பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால், மக்கள் தேர்தலைப் பற்றிக் கவலைப்படவில்லை. அதேவேளை அவர்கள் எப்படியாவது உயிர்வாழ விரும்புகிறார்கள். நாட்டில் நிலவும் நெருக்கடி காரணமாக அனைத்து மக்களும் இப்போது உணர்ச்சிவசப்பட்டு கட்டுப்பாடற்ற நடத்தைகளில் ஈடுபடுகின்றனர்.

நாட்டில் இந்த நெருக்கடியான நேரத்தில் பொது தேர்தலை நடத்த முயற்சிப்பதன் மூலம், நாட்டில் கணிக்க முடியாத மற்றும் அழிவுகரமான பயங்கரவாத சகாப்தம் உருவாக்கப்படும். சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் இந்த நேரத்தில் பொதுத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு அரசாங்கத்திடம்கோருகின்றனர், ஏனெனில் தற்போதைய பொருளாதார நெருக்கடியை மூலதனமாக்குவதன் மூலம் தேவையற்ற அரசியல் நன்மைகளைப் பெற முடியும் என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்குப் பதிலாக, தேர்தல் செலவினங்களைக் குறைப்பது தொடர்பில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலிப்பது தான் இப்போதைய சூழ்நிலைக்கு சரியானது என்று நான் நினைக்கிறேன். – என புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

## மாற்றுத் திறனாளி பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு உலருணவு வழங்கிவைப்பு



யாழ்.மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிப் பெண் தலைமைத்துவத்துடன் வறுமைநிலையில் உள்ள குடும்பம் ஒன்றுக்கு ஒருவேளை உணவுக்காக என்ற தொனிப்பொருளில் உலருணவுப் பொதி கடந்த சனிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டது.

கனடாவில் வாழ்ந்துவரும் பஞ் சொக்கலிங்கம் என்பவரது நிதிப்பங்களிப்புடன் சமூகசேவையாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமார சாமி ஊடாக இந்த உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

## பாவனையாளர் அதிகார சபையால் அரிசி ஆலைகளில் திடீர் சோதனை!

### கிளிநொச்சியில் அதிரடி

கிளிநொச்சி மாவட்டத்தில் அரிசி ஆலைகள் மற்றும் அரிசி விற்பனை நிலையங்களில் திடீர்சோதனைநடவடிக்கைகளைஞாயிற்றுக்கிழமை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்கள் முன்னெடுத்திருந்தனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடிய விலையைப் பொறித்த அல்லது காட்சிப்படுத்திய அரிசி ஆலை உரிமையாளர் மற்றும் கூடிய விலையில் அரிசியை விற்பனை செய்த விற்பனையாளர்களுக்கெதிராகவும் விலை காட்சிப்படுத்தாது அரிசி விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு எதிர்வரும் நாள்களிலும் அரிசி விற்பனை விலை தொடர்பான திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு முறைகேடுகளில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர். அதேவேளை அதிகளவான நெல்லை இருப்பில் வைத்துள்ள போதிலும் அதனை அரிசியாக்கி சந்தைக்கு விநியோகம் செய்ய மறுக்கும் பதுக்கல் நடவடிக்கைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும், பொதுமக்கள் அரிசி கொள்வனவின் போது விலை தொடர்பில் அவதானம் செலுத்துவதுடன் முறைகேடான வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யுமாறும் அல்லது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை துரித சேவை இலக்கமான 1977 ஊடாகவும் முறைப்பாடுகளை வழங்க முடியும் எனவும் பாவனையாளர் அலுவலக்ள் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.



## 80 வீத சிற்றுண்டிச்சாலைகள் எரிவாயு தட்டுப்பாட்டால் பூட்டு

நாட்டில் நிலவிவரும் எரிவாயு தட்டுப்பாடுக் காரணமாக புறக்கோட்டை உள்ளிட்ட பல நகரங்களில் உள்ள 80 வீதமான சிற்றூண்டிச்சாலைகள் மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய சுயத்தொழில் வர்த்தக சங்கம், சிறிய மற்றும் நடுத்தர சிற்றுண்டிச்சாலைகளின் உரிமையாளர்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு மற் றும் விலையேற்றத்தால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. நாட்டில் தற்போது எரிவாயு கிடைக்காத காரணத்தால் பலர் தங்களின் தொழிலைக்கைவிடவேண்டியநிலைஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அவர்களது குடும்பத்தினர் பாரியஅசௌகரியங்களுக்குமுகங்கொடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரச கடன் தொடர்பான தேசிய கணக்காய்வு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது அலுவலகம்!

நாட்டின் அரச கடன்கள் தொடர்பான விசேட கணக்காய்வொன்றை தேசிய கணக்காய்வு அலுவலகம் ஆரம்பித்துள்ளது.

2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட 3 வருட காலப்பகுதியில் பெறப்பட்ட அரச கடன்கள் தொடர்பாகவே, தேசிய கணக்காய்வு அலுவலகம் இந்த விசேட கணக்காய்வில் கவனம் செலுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட கணக்காய்வு அறிக்கையை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்ப்பார்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக இளையோர் திருக்குறள்மன்ற ஆண்டுவிழாவும் திருவள்ளுவர் தினப் போட்டிகளுக்கான பரிசளிப்பும்








உலக இளையோர் திருக்குறள் மன்றத்தின் ஆண்டு விழாவும் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாசும் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) மாலை கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் திருமதி வலன்ரீனா இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றது.

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு யாழ். மற்றும் வெளி மாவட்டங்களில் மனனப்போட்டி, பேச்சுப்போட்டி என போட்டிகள் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்று வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக் கேடயங்களும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வின் போது யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தமையோடு, எஸ்.மதியழகன், கொக்குவில் இந்து கல்லூரி முன்னாள் அதிபர் பொ.கமலநாதன், இராஜேஸ்வரி மண்ட உரிமையாளர் செ.திருமாறன் ஆகியோர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.06.2022இல் வெளியிடப்பெற்றது.